# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2486 - 2026 අප්‍රේල් 24 වැනි සිකුරාදා - 2026.04.24

2486 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 724 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 727 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2026, மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
**அரசாங்க அழுத்தகர்.**

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 08,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

723 - B 82785 - 403 (2026/04)

# அரசாங்க அறிவித்தல்கள்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2026.04.24 தொடக்கம் 2026.05.08 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு ஹோமாகம காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2026.05.15 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/ என்பீ/11/2/43/2025/ ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ ஏ3,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் I<br>பதிவு புத்தகங்களில் சிதைவடைந்த இருமடித்தாள்கள் பற்றிய விபரம் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட காணி உறுதி பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட ஹோமாகம காணிப்பதிவக ஜி பிரிவின் 307 ஆம் காணிப்பதிவுப்புத்தகத்தின் 227 ஆம் இருமடித்தாள் | மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்திலுள்ள பல்லே பத்து ஹேவாகம் கோரளை, தலங்கம எனும் இடத்தில் அமைந்துள்ள "தாம்புகஹவத்த" எனும் பெயருடைய காணிக்கு 09,10/பெப்.62 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2294 கொண்ட நில அளவைப் படத்தில் உள்ள துண்டு இலக்கம் 1 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள்,<br><br>வடக்கு மற்றும் கிழக்கு : மறைந்த டொன் ஆபிரகாம் பாலசூரியவின் வாரிசுகளுக்கு தற்போது உரித்தான ஆதனம்,<br>தெற்கு : துண்டு இலக்கம் 02,<br>மேற்கு : வீதி மற்றும் பி. டி. அரனோலிஸ் என்பவருக்குச் சொந்தமான தெல்கஹவத்த.<br><br>நிலப்பரப்பு : 01ஏ. 00றூ. 10.295பேர்ச் | 1. கொழும்பு மேலதிக மாவட்ட நீதவான் ஏ. ஈ. பூல்ஜன்ஸ் அவர்களினால் 1962.04.01 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்ட, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் 7789/பி கொண்ட இறுதித் தீர்வை<br><br>2. பிரசித்த நொத்தாரிசு டி. டி. என். கே. அபேநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1963.02.21 ஆந் திகதிய 487 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>3. பிரசித்த நொத்தாரிசு எச். ஏ. சீலவதி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1983.07.06 ஆந் திகதிய 56 ஆம் இலக்க நன்கொடை உறுதி.<br><br>4. பிரசித்த நொத்தாரிசு எச். ஏ. சீலவதி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1983.07.06 ஆந் திகதிய 55 ஆம் இலக்க நன்கொடை உறுதி. |

04-310

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2026.04.24 தொடக்கம் 2026.05.08 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்த காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2026.05.15 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/ என்பீ/11/2/86/2025/ ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ ஏ3,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் I<br>பதிவு புத்தகங்களில் சிதைவடைந்த இருமடித்தாள்கள் பற்றிய விபரம் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட காணி உறுதி பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட தெல்கந்த காணிப்பதிவக எம். பிரிவின் 677 ஆம் காணிப்பதிவுப்புத்தகத்தின் 164 ஆம் இருமடித்தாள் | மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டி கோரளை, பல்லே பத்து அத்திடிய எனும் இடத்தில் அமைந்துள்ள "கஹடகஹவத்த" எனும் பெயருடைய காணிக்கு நில அளவையாளர் வி. ஏ. எல். சேனாரத்ன அவர்களின் 1960.03.27 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 1736 கொண்ட நில அளவைப் படத்தில் உள்ள துண்டு இலக்கம் 04 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள்,<br><br>வடக்கு : கிரிபல்லகஹவத்த,<br>கிழக்கு : துண்டு இலக்கம் 05 மற்றும் டி (ஒரு பாதைக்கு ஒதுக்கப்பட்டது),<br>தெற்கு : துண்டு இலக்கம் 06 மற்றும் 07,<br>மேற்கு : துண்டு இலக்கம் 03.<br><br>நிலப்பரப்பு : 00ஏ. 00றூ. 20.60பே | 1. பிரசித்த நொத்தாரிசு பி. ஏ. டி. சமரசேகர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1960.06.24 ஆந் திகதிய 103 ஆம் இலக்க அறுதி உறுதி<br><br>2. பிரசித்த நொத்தாரிசு டப்ளியூ. டி. கமகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.07.31 ஆந் திகதிய 2477 ஆம் இலக்க நன்கொடை உறுதி<br><br>3. பிரசித்த நொத்தாரிசு டப்ளியூ. டி. கமகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.07.31 ஆந் திகதிய 2478 ஆம் இலக்க நன்கொடை உறுதி. |

04-311

பதிவு செய்தல் 96
(F2) 2/64

**கட்டிடப் பதிவுச் சான்றிதழ்**

சான்றிதழ் இலக்கம் - 1562

விவாக பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆவது அத்தியாயம்) 10 ஆவது பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க சசிதேவி ஜலதீபன் என்னும் பெயருடைய இலங்கையின் பதிவாளர் நாயகம் ஆகிய நான், பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடத்தினை, திருமணத்தை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்துகின்றேன்.

| விபரம் | அமைவிடம் | | மாவட்டம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| | கிராமம் அல்லது வீதி மற்றும் நகரப் பிரிவு | பற்று கோறளை அல்லது மாவட்டத்தின் வேறு பிரிவு | | | |
| வேளாங்கன்னி ஆரோக்கிய மாதா தேவாலயம் | ஆந்தம்குளம் | திருகோணமலை | கம்பஹா | கௌரவ பிதா பிரான்ஸிஸ் ரொஹான் பெர்ணாண்டோ | ரோமன் கத்தோலிக்கம் |

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி,
பத்தரமுல்லையில் என்னால்,
கையொப்பமிடப்பட்டது.

04-296/1

---

பதிவு செய்தல் 97
(F2) 2/64

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக தேவாலயங்களினைப் பதிவு செய்தல்**

விவாக பதிவு கட்டளைச் சட்டத்தின் (112 ஆவது அத்தியாயம்) 10 ஆவது பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க சசிதேவி ஜலதீபன் என்னும் பெயருடைய இலங்கையின் பதிவாளர் நாயகம் ஆகிய நான், பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடத்தினை, திருமணத்தை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டிருப்பதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

| இலக்கம் | பதிவு செய்யப்பட்ட திகதி | விபரம் | அமைவிடம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1562 | 2026.03.23 | வேளாங்கன்னி ஆரோக்கிய மாதா தேவாலயம் | ஆந்தம்குளம் | கௌரவ பிதா பிரான்ஸிஸ் ரொஹான் பெர்ணாண்டோ | ரோமன் கத்தோலிக்கம் |

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.
2026.04.06

04-296/2

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.21 ஆந் திகதி இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது.

1. மாத்தறை பிரசித்த நொத்தாரிசு திருமதி பீ. பீ. ஜீ. தினேஷா அத்தாட்சிப்படுத்திய 2018, ஒற்றோபர் 19 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 65 மற்றும் 2019, மாச்சு 11 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 280 ஆகியவற்றின் பேரில் மாத்தறை, நாரங்கல என்னும் முகவரியில் அமைந்த கே. பி. என். சிலோன் றீ நிறுவனத்திடமிருந்து 1 ஆவது கடன் மீது 2023.10.12 ஆந் திகதி வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூபா 7,587,581.58 (ஏழு மில்லியன் ஐந்நூற்று எண்பத்தேழு ஆயிரத்து ஐந்நூற்று எண்பத்தொரு ரூபாய் ஐம்பத்தெட்டு சதமும்) அத்துடன் ரூபா 5,763,000.00 (ஐந்து மில்லியன் எழுநூற்று அறுபத்து மூன்று ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து (13.5%) வீதத்தில் 2023.10.13 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மற்றும் 2 ஆவது கடன் மீது 2023.10.12 ஆந் திகதி வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூபா 11,933,678.07 (பதினொரு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று ஆயிரத்து ஆறு நூற்று எழுபத்தெட்டு ரூபாய் ஏழு சதமும்) அத்துடன் ரூபா 8,943,223.91 (எட்டு மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்று ஆயிரத்து இருநூற்று இருபத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றொரு சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து (13.5%) வீதத்தில் 2023.10.13 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்.

2. மாத்தறை பிரசித்த நொத்தாரிசு திருமதி பீ. பீ. ஜி. தினேஷா அத்தாட்சிப்படுத்திய 2018, ஒற்றோபர் 19 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 65 மற்றும் 2019, மாச்சு 11 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 280 ஆகியவற்றின் பேரில் 1 ஆவது கடன் மீது ரூபா 7,587,581.58 (ஏழு மில்லியன் ஐந்நூற்று எண்பத்தேழு ஆயிரத்து ஐந்நூற்று எண்பத்தொரு ரூபாய் ஐம்பத்தெட்டு சதமும்) மற்றும் 2 ஆவது கடன் மீது ரூபா 11,933,678.07 (பதினொரு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்து மூன்று ஆயிரத்து ஆறு நூற்று எழுபத்தெட்டு ரூபாய் ஏழு சதமும்) அத்துடன் 2023.10.13 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 182/3, (50/3), விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21 ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மாத்தறை மேற்தரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில் கங்கபொடபற்றுவில் திஹகொட பிரதேச செயலகப் பிரிவு மற்றும் திஹகொட பிரதேச சபை எல்லைகளுள் நாரங்கல கிராம உத்தியோகத்தர் பிரிவில் கித்துலகமயில் அமைந்த "ஹேனவத்த" என அழைக்கும் காணியின் காணித்துண்டு 5 இன் ஒன்றிணைத்த காணித்துண்டுகள் 5A, 5B, 5C உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி. எச். பி. நிஹால் சில்வா தயாரித்த 2014, செத்தெம்பர் 03 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 0167/14 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 01 வடக்கு: வரைபடம் இல. 3806 இல் காணித்துண்டு 5D மற்றும் 5H உம்; கிழக்கு: பதுள்ள கலேயும்; தெற்கு: இக்காணியின் காணித்துண்டு 6 உம்; மேற்கு: பிரதேச சபை பாதையும் எல்லைகளாகக் கொண்டு மூன்று றூட் பன்னிரெண்டு பேர்ச் (00ஏ. 03றூ. 12பே) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண் மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் L68/139 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

டப்ளியூ. டப்ளியூ. ஏ. ஜே. பிரசங்க,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மாத்தறை மேற்தரக் கிளை.

04-317

---

## யூனியன் பேங்க் கொழும்பு பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்படுகின்ற கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீனால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக்குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2026, பெப்புருவரி 24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் பொது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் (இதனகத்துப் பின்னர் "கடப்பாடுடையவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) இல. 20/1, ஆலோக மாவத்தை, லன்சியாவாடிய, கொடுகொட என்ற முகவரியில் வசிக்கின்ற சன்முகம் ரன்ஜன் (தேசிய அடையாள அட்டை இல. 197724503809) என்பவர் (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி என அழைக்கப்படுகின்ற) PB676PQ கம்பனிப் பதிவிலக்கத்தையுடையதும் மற்றும் இல. 64, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட முகவரியையும் கொண்ட கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ வங்கியிலிருந்து வீடமைப்புக் கடன் வசதியொன்றைப் பெற்றுக் கொண்டிருப்பதாலும் அத்தோடு சொல்லப்பட்ட கடப்பாடுடையவர் ஐம்பத்தேழு இலட்சம் (ரூபா 5,700,000.00) மற்றும் அதன் மீதான வட்டி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என்பவற்றிற்கு பிணைப்பொறுப்பாக ஐம்பத்தேழு இலட்சம் (ரூபா 5,700,000.00) தொகைக்காக பிரசித்த நொத்தாரிசு யூ. டீ. என். சனிக அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025.03.03 ஆந் திகதிகளையுடைய 1003 ஆம் இலக்க முதன்மை ஈட்டுமுறியை வழங்கி இதன் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட ஆதனத்தை ஈடுவைத்து அடைமானம் செய்திருக்கின்றார்.

அத்தோடு சொல்லப்பட்ட கடன் வசதி மீது 2025.12.28 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக உள்ள ஐம்பத்தெட்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐந்நூற்று ஒன்பது ரூபாய் முப்பத்தாறு சதம் (ரூபா 5,850,509.36) தொகை மற்றும் 2025.12.29 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை மூலதன நிலுவைத் தொகையான ஐம்பத்தைந்து இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு ரூபாய் அறுபத்தொரு சதம் (ரூபா 5,585,824.61) தொகை மீது வருடத்துக்கு 14% சதவீதம் மேலதிக வட்டியும் யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட கடப்பாடுடையவரிடமிருந்து வருமதியாகவும் மற்றும் சேர வேண்டியதாகவும் உள்ளது.

யூனியன் வங்கிப் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட கடப்பாடுடையவர் மேற்குறித்த வீடமைப்புக் கடன் நிலுவைகளை அல்லது அவற்றின் பகுதிகளை கொடுத்துத் தீர்ப்பதில் தவணை தவறியுள்ளார் எனத் திருப்திப்பட்டுள்ளதனாலும், சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதி மீது கடப்பாடுடையவரிடமிருந்து யூனியன் வங்கிக்கு வருமதியானதும் மற்றும் சேர வேண்டியதுமான 2025.12.28 ஆந் திகதியில் உள்ளவாறு சொல்லப்பட்ட வீடமைப்புக் கடன் வசதி மீது நிலுவையாக உள்ள ஐம்பத்தெட்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து ஐந்நூற்று ஒன்பது ரூபாய் முப்பத்தாறு சதம் (ரூபா 5,850,509.36) தொகையையும் மற்றும் மேலே சொல்லப்பட்டவாறு வட்டியையும் மற்றும் சொல்லப்பட்ட 1003 ஆம் இலக்க முதன்மை ஈட்டு முறியின் நியதிகள் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரமும் யூனியன் வங்கிக்கு மீட்டுக்கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைகளையும் மீட்டுக்கொள்வதற்காக, சொல்லப்பட்ட பிரசித்த நொத்தாரிசு யூ. டீ. என். சனிக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சொல்லப்பட்ட 1003 ஆம் இலக்க 2025.03.03 ஆந் திகதிகளையுடைய நிலவுகின்ற ஈட்டுமுறியின் கீழ் மற்றும் அதன் பயனால் யூனியன் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளராகிய சந்திம கமகே என்பவருக்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

"தொடம்கஹவத்த" என அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எஸ். ஜயலத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2022.08.07 ஆந் திகதியுடைய 8731 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் A என சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதோடு மூன்று றூட்கள் மற்றும் இருபத்து நான்கு பேர்ச் (00ஏ. 03றூ. 24பே) விஸ்தீரணத்தைக் கொண்டு அத்தனகல்ல காணிப் பதிவகத்தில் G 624/112 பிரிவு/ இருமடி இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

அத்தகைய காணி மீள் - அளவீடு செய்யப்பட்டு துண்டங்கள் 8 மற்றும் 9 என உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு G 734/14, 115 மற்றும் 117 பிரிவு/ இருமடி இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

(1) மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரளை, கங்கபடபற்று, தொம்பே பிரதேச சபை மற்றும் தொம்பே பிரதேச செயலகப் பிரிவு எல்லைகளுக்குள், இல. 416A சமனபெத்த கிராம சேவையாளர் பிரிவில், சமனபெத்த என்ற கிராமத்தில் அமைந்துள்ளதும் அத்தோடு கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கி "தொடம்கஹவத்த" என அழைக்கப்படுகின்ற

காணியின் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எஸ். ஜயலத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2022.12.10 ஆந் திகதியுடைய 9095 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 8 என சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட வரைபட இல. 9095 இற்கு ஏற்ப சொல்லப்பட்ட துண்டம் 8 இற்கு எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: துண்டம் R1; கிழக்கு: துண்டம் 9; தெற்கு: மில்லகஹகும்புர வயல் மற்றும் மேற்கு: துண்டம் 7 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள பத்து தசம் ஏழு ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 10.75பே) அல்லது ஹெக்டெயார் 0.0272 விஸ்தீரணத்தைக் கொண்டது.

(2) மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், சியனே கோரளை , கங்கபடபற்று, தொம்பே பிரதேச சபை மற்றும் தொம்பே பிரதேச செயலகப் பிரிவு எல்லைகளுக்குள், இல. 416A சமனபெத்த கிராம சேவையாளர் பிரிவில், சமனபெத்த என்ற கிராமத்தில் அமைந்துள்ளதும் அத்தோடு கட்டடங்கள், மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கி "தொடம்கஹவத்த" என அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். எஸ். ஜயலத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2022.12.10 ஆந் திகதியுடைய 9095 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 9 என சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட வரைபட இல. 9095 இற்கு ஏற்ப சொல்லப்பட்ட துண்டம் 9 இற்கு எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: துண்டம் R1; கிழக்கு: துண்டம் 10; தெற்கு: மில்லகஹகும்புர வயல் மற்றும் மேற்கு: துண்டம் 8 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி பத்து தசம் ஏழு ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 10.75பே) அல்லது ஹெக்டெயார் 0.0272 விஸ்தீரணத்தைக் கொண்டது.

பின்வரும் காணிகளின் மீதும் மற்றும் அதன் வழியேயுமான பாதை உரித்துக்கு உட்பட்டது.

(1) மேலே சொல்லப்பட்ட 9095 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் R1 என சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட R1 பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது: வடக்கு: இதன் துண்டங்கள் 3, 2 மற்றும் 1; கிழக்கு: பெருந்தெரு மற்றும் துண்டம் 7; தெற்கு: இதன் துண்டங்கள் 10, 9, 8 மற்றும் 7 மற்றும் மேற்கு: இதன் துண்டம் R2 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி பதின்மூன்று தசம் ஒன்பது ஐந்து பேர்ச் (00ஏ. 00றூ. 13.95பே) அல்லது ஹெக்டெயார் 0.0353 விஸ்தீரணத்தைக் கொண்டு அத்தனகல்ல காணிப்பதிவகத்தில் G 734/14 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(2) மேலே சொல்லப்பட்டவாறு சமனபெத்த என்ற கிராமத்தில் அமைந்துள்ள "தொடம்கஹவத்த" என அழைக்கப்படுகின்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். எஸ். ஜயலத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2022.12.10 ஆந் திகதியுடைய 9095 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் R2 என சித்தரிக்கப்பட்டுள்ளது. என்பதோடு சொல்லப்பட்ட துண்டம் R2 பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது: வடக்கு: இதன் துண்டம் 4; கிழக்கு: R1 மற்றும் இதன் துண்டம் 7; தெற்கு: இதன் துண்டம் 6 மற்றும் மேற்கு: இதன் துண்டங்கள் 5 மற்றும் D2 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி மூன்று தசம் ஒன்று பூச்சியம் பேர்ச் (00ஏ. 00றூ. 3.10பே) அல்லது ஹெக்டெயார் 0.0079 விஸ்தீரணத்தைக் கொண்டு அத்தனகல்ல காணிப்பதிவகத்தில் G 734/15 பிரிவு/ இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

04-298

---

**டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளின் கடன்களை அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ ஆல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்த அறிவிப்பு.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 8 இன் படி, பின்வரும் தீர்மானம் 2026, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி அன்று டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**சபைத் தீர்மானம்**

ஆகையால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பீவி 00205109 என்ற கம்பனிப் பதிவிலக்கத்தைக் கொண்டதும் மற்றும் மஹரகமயில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கொண்ட கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட வொய்ஸ்ட் மார்க்கெட்டிங் சேர்வீசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் (இனிவரும் காலங்களில் "த கம்பனி" என்று குறிப்பிடப்படுகின்றது) என்ற கம்பனி, டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ இன் சார்பாக பிரசித்த நொத்தாரிசு கேதுமல பிரசாதினி கஹாவிதான என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரண்டுமான 2024.10.08 மற்றும் 2021.11.17 ஆம் திகதியிட்ட 6465 மற்றும் 5609 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மீது வருமதியான கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளதால்,

மேலும், மேற்கூறிய 6465 மற்றும் 5609 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மூலம் மேற்கூறிய வொய்ஸ்ட் மார்க்கெட்டிங் சேர்வீசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் மூலம், டீஎவ்சீசீ வங்கி

பீஎல்சீக்கு 2025, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய தொகையாக, ஒன்பது மில்லியன் நூற்று நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று முப்பது ரூபாய் ஐம்பத்தேழு சதம் (ரூபா 9,148,830.57) கொண்ட தொகைக்கு 2025, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் விற்பனை திகதி வரையிலான வட்டியுடன் சேர்த்து, ஏழு மில்லியன் ஏழுநூற்று தொண்ணூற்று ஆறாயிரத்து ஐந்நூற்று அறுபத்தாறு ரூபாய் ஐம்பத்தாறு சதம் (ரூபா 7,796,566.56) கொண்ட தொகைக்கு ஆண்டுக்கு எட்டு தசம் ஏழு ஐந்து சதவீதம் (8.75%) என்ற சராசரி நிறையிடப்பட்ட முதன்மை கடன் வீதத்துக்கு (AWPLR) ஆண்டிற்கு அருகிலுள்ள 0.5% வரை மேல்நோக்கி வட்டமிடப்பட்டு, ஒவ்வொரு மாதத்தின் முதல் வணிக நாளில் திருத்தம் செய்யப்படும்,

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கூறப்பட்ட தொகையான ஒன்பது மில்லியன் நூற்று நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று முப்பது ரூபாய் ஐம்பத்தேழு சதம் (ரூபா 9,148,830.57) கொண்ட தொகைக்கு 2025, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் விற்பனை திகதி வரையிலான வட்டியுடன் சேர்த்து, ஏழு மில்லியன் ஏழுநூற்று தொண்ணூற்று ஆறாயிரத்து ஐந்நூற்று அறுபத்தாறு ரூபாய் ஐம்பத்தாறு சதம் (ரூபா 7,796,566.56) கொண்ட தொகைக்கு ஆண்டுக்கு எட்டு தசம் ஏழு ஐந்து சதவீதம் (8.75%) என்ற சராசரி நிறையிடப்பட்ட முதன்மை கடன் வீதத்துக்கு (AWPLR) ஆண்டிற்கு அருகிலுள்ள 0.5% வரை மேல்நோக்கி வட்டமிடப்பட்டு, ஒவ்வொரு மாதத்தின் முதல் வணிக நாளில் திருத்தம் செய்யப்படும், அல்லது விற்பனை நேரம் வரை செலுத்தப்படாமல் இருக்கும் அதன் எந்தப் பகுதியையும் மீட்டெடுக்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ ஆல் செலவிடப்பட்ட அனைத்துப் தொகைகளும், விளம்பரக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து அறவிடுவதற்காக மேலே குறிப்பிடப்பட்ட 6465 மற்றும் 5609 ஆம் இலக்க ஈட்டு முறிகள் மூலம், நதீகா சஞ்சீவ ஹெட்டியாராச்சி என்பவர், டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ இல் அடமானம் வைக்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடம் என்பன உரிமம் பெற்ற ஏலதாரர் சந்திமா பிரியதர்ஷனி கமகே என்பவரினால் பொது ஏலத்தில் விற்கப்படும், இதன் மூலம் பின்வருவனவற்றை முன்மொழிகிறது.

**6465 மற்றும் 5609 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விபரம்**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரய்கம் கோரளே, முன்வத்த பகே பத்துவே, கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 650, எலவெல்ல, புலத்சிங்கள பிரதேச சபையின் எல்லைக்குள், புலத்சிங்கள பிரதேச செயலகம் மற்றும் பெல்லப்பிட்டியவில் அமைந்துள்ள மண், கட்டிடங்கள், மரங்கள், தோட்டம் மற்றும் அதன் மீது நிற்கும் அனைத்தும் உட்பட, முன்னர் யஹாலகெலே குழுமத்திற்குச் சொந்தமான, சொரனா எஸ்டேட் தோட்டத்தின் திக்ஹேன பிரிவின் ஒரு பகுதி எனப்படும் காணி. உரிமம் பெற்ற நில அளவையாளர் டீ. எச். அதுலத்முதலி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1988.10.01 ஆந் திகதியிடப்பட்ட 2058 ஆம் இலக்க அளவீட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டம் 1 என அடையாளம் இடப்பட்ட காணித்துண்டு பிரிக்கப்பட்டும் மற்றும் வரையறுக்கப்பட்டது மற்றும் மேற் கூறப்பட்ட துண்டம் 1 இன் எல்லைகளாவன வடக்கு: துண்டம் 149, 150 இன் மூலம்; கிழக்கு: துண்டம் 445 (வீதிக்கான ஒதுக்கீடு); தெற்கு: துண்டம் 166 இன் மூலம்; மேற்கு: துண்டம் 161 இன் மூலம் மற்றும் அதன் அளவானது இருபது பேர்ச் (00ஏ. 00றூ. 20பே) அல்லது ஹெக்டெயார் 0.05058 கூறப்பட்ட வரைபட இல. 2058 இன் படி.

உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. எச். அதுலத்முதலி அவர்களால் 1988.10.01 ஆந் திகதியிடப்பட்ட 2058 ஆம் இலக்க அளவீட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துண்டங்கள் 445, 444, 428, 423 மற்றும் 256 எனக் குறிப்பிட்ட ஒதுக்கீட்டின் மீதும் மற்றும் அதன் மேலால் செல்லும் வழித்தட உரிமையுடன் சேர்த்து, வீதிகளுக்காகக் கூறப்பட்ட அந்த ஒதுக்கீட்டின் மீதும், கீழும் மற்றும் அதன் நெடுகிலும் மின்சாரக் கம்பிவடங்கள், மேல்நிலைக் கம்பிகள் மற்றும் பிரதான வடிகால், கழிவுநீர், எரிவாயு, குடிநீர்க் குழாய்கள் மற்றும் வடிகால்களைப் பதிப்பதற்கான முழுமையான மற்றும் தடையற்ற உரிமையுடன் சுதந்திரமும் அடங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பெனிச் செயலாளர்,
டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ.

04-302

---

**கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீ.எல்.சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீ.எல்.சீ (பதிவு இலக்கம் PQ 116) இன் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கிளை : சிலாபம் கிளை
கடன் கணக்கு இலக்கம் : 2305658

**கெவிடியாகல விதானகே நதீஷா ரங்க லோசினி ஜயசேகர மற்றும் மிஹிதுகுலசூரிய ஜூட் பிரசாத் சுரஞ்சி பெர்ணாண்டோ**

2026 சனவரி மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை ஒருமனதாக பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:

வைக்கால பிரபலமான நோட்டரி டப்ளியூ. என். ஐ. எஸ். யூ. பெர்ணாண்டோ அவர்களினால் 2018.09.11 ஆந் திகதி சான்றளிக்கப்பட்ட இலக்கம் 18797 கொண்ட அடமான பத்திரத்துடன் இலக்கம் 18798 கொண்ட மேலதிகமான அடமான பத்திரம் மூலம் இங்கு கீழே அட்டவணையில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ள முறையான சொத்து அடமானம் வைக்கப்பட்டுள்ள முன்னேஸ்வரம், அதுபிடிய தோட்டத்திலும் மேலும் கொழும்பு 13, கொட்டாஞ்சேனை சுமித்ராராம மாவத்தை, இல. 190 என்ற இடத்திலே கெவிடியாகல விதானகே நதீஷா ரங்க லோசினி ஜயசேகர மற்றும் மிஹிதுகுலசூரிய ஜூட் பிரசாத் சுரஞ்சி பெர்ணாண்டோ கடனாளியாக வேறு தகவல்களுடன் மேலே குறிப்பிட்ட வசதிகள் திருப்பி கொடுப்பதற்காக பிணையமாக கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீஎல்சீ பெயருக்கு எழுதப்பட்ட பின்பும் அதன் அடமானப் பத்திரங்களின் கீழ் முறையாக கோரப்பட்டாலும் செலுத்தவேண்டிய தொகை கொடுப்பனவுகளை கெவிடியாகல விதானகே நதீஷா ரங்க லோசினி ஜயசேகர மற்றும் மிஹிதுகுலசூரிய ஜூட் பிரசாத் சுரஞ்சி பெர்ணாண்டோ செலுத்த தவறியதால்,

மற்றும் வேறு தகல்களுடன் இங்கு கீழே காண்பிக்கப்படும், மேற்கூறிய அடமான பத்திரத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட வீட்டுக் கடன் கணக்கு எண் 2305658 தொடர்பாக அசல் தொகை மற்றும் வட்டியாக ஐம்பத்தேழாயிரத்து நூற்று நாற்பத்தொன்பது தசம் முப்பத்தொரு யூரோ (யூரோ 57,149.31) முழுத் தொகை 2025, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்குள் கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீஎல்சீ க்கு தற்போது பெற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் பெறவேண்டி உள்ளதால் அதன் தொகை ரூபாய் ஐம்பத்தேழாயிரத்து நூற்று நாற்பத்தொன்பது தசம் முப்பத்தொரு யூரோ (யூரோ 57,149.31) தொகை (அல்லது செலுத்தவேண்டிய காலப்பகுதிக்குள் நிலவும் அந்திய செலாவணி விகிதத்தின்படி இலங்கை ரூபாயில் அதற்கு இணையான தொகை பெற்றுக் கொள்வதற்காக மற்றும் 2026, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரையிலான காலப்பகுதிக்குள் அதன் மறுசீரமைக்கப்பட்ட வீட்டுக் கடன் கணக்கு எண் 2305658 படி யூரோ 49,904.47 மிகுதியான அசல் தொகைப்படி வருடத்திற்கு யூரோ ESTR மதிப்பு + 3% (அதன்படி 2025.12.31 ஆந் திகதிக்குள் 4.927% விகிதப்படி) மேலதிக வட்டியுடன் விளம்பரத்திற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் வேறு செலவுகள் உட்பட இதுவரையிலான பெற்றுக் கொண்ட ஏதாவது தொகை இருப்பின் அதையும் குறைத்துக்கொண்டு மேலே குறிப்பிட்ட இல. 18797 மற்றும் 18798 கொண்ட அடமான பத்திரத்தின் கீழ் கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீஎல்சீ க்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே ஆவணங்களில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளதோடு சொத்து கொழும்பு 08, பொரெல்ல பெலென்கஸ்துடுவ வீதியில், இல. 109/21 கொண்ட இடத்தில் அரவ்வாவல சுசிலா குமாரி அவர்களினால் பொது ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று 1990 இல. 04 இல் வங்கியால் வழங்கப்பட்ட கடன்களை மீட்பதற்காக (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கொமர்ஷல் பேங்க் ஓஃப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

**மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணை**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், வடக்கு பிடிகல் கோரளை முன்னேஸ்வரம் பத்துவில் சிலாபம் பிரதேச சபை எல்லைக்குள் சிலாபம் பிரதேச செயலக பிரிவுக்குள் முன்னேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவுக்குள் முன்னேஸ்வரம் கிராமத்தில் அமைந்துள்ள "ஹதுபிடியவத்த" என்ற காணிக்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர் எச். எம். எஸ். கே. ஹேரத் அவர்களினால் 2016.08.28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 5561 கொண்ட பிபுரே பிரித்து ஒதுக்கப்பட்டுள்ள லொட் 02 என குறிப்பிடப்படும் காணிப் பகுதிக்கு எல்லையாக வடக்கு: அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர் எம். எம். பீ. டீ. பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட இல. 7705 கொண்ட பிபுரில் லொட் 3 மற்றும் (15 அடி அகலமான பாதை) மூலமாகவும்; கிழக்கு: அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர் எச். எம். எஸ். கே. ஹேரத் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இல. 4961 கொண்ட பிபுரில் லொட் 1 மூலமாகவும்; தெற்கு: பீ. ஏ. ஆர். பெரேராவின் காணி, ஆர். டீ. பீரிஸின் காணி மற்றும் சோவிஸின் காணி மூலமாகவும் மற்றும் மேற்கு: எச். எம். எஸ். கே. ஹேரத் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இல. 5561 கொண்ட பிபுரில் லொட் 1 மூலமாகவும் எல்லைக்குட்பட்ட அதன் இல. 5561 கொண்ட பிம்புரின்படி றூட் ஒன்று (00ஏ. 01றூ. 00பே) என்ற பெரிய நிலத்துடன் கட்டிடங்கள் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் கூடிய இது சிலாபம் நிலப் பதிவு அலுவலகம் வெலும்/ பத்திரம் A 15/123 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பீ. ராஜபக்ஸ,
நிறுவன செயலாளர்.

2026, சனவரி 30

04-303

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

இலக்கம் 13/14, சரசவி வீதி, எஸ். டி. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை, கலுபோவில, தெஹிவளை எனும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட தயா குழுமத்தின் பொறுப்புகளுக்காக அம்பாறையிலுள்ள போட் லேன்ட் என

அழைக்கப்படும் ஆதனத்தின் குத்தகை உரிமை ஒப்படைப்பு மற்றும் வட்டி மீதான அடமானம்.

2025.11.14 ஆந் திகதியன்று இடம்பெற்ற கூட்டத்தில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு ஜெ. சீ. மஹாஆரச்சி அத்தாட்சிப்படுத்திய 2017.06.01 ஆந் திகதியிட்ட 460 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொண்ட தவணைக் கடன் வசதி மீது 2025.10.01 ஆந் திகதி வரையான வட்டியும் முதலுமாக ஐ. அமெ. டொலர்கள் 2,857,077.05 (இரண்டு மில்லியன் எண்ணூற்று ஐம்பத்தேழாயிரத்து எழுபத்தேழு மற்றும் ஐந்து சதம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) 2025.10.02 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஐ. அமெ. டொலர்கள் 1,809,520.00 (ஒரு மில்லியன் எண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐந்நூற்று இருபது ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) முதல் நிலுவை மீது ஆண்டுக்கு ARR - SOFR (3M) + 3.0% (ஆண்டுக்கு ஆகக் குறைந்த வீதம் 5%) என்ற வீதத்திலான வட்டி மற்றும் பொருந்தக் கூடியவாறு ஆண்டுக்கு 4% என்ற வீதத்திலான அபராத வட்டி உள்ளிட்ட திரட்டப்படவேண்டிய மேலதிக வட்டியும் இலக்கம் 13/14, சரசவி வீதி, எஸ். டி. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை, கலுபோவில, தெஹிவளை எனும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட தயா குழுமத்திடமிருந்து வங்கிக்கு நிலுவையாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட 460 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் நிலுவையாகவுள்ள ஐ. அமெ. டொலர்களின் 2,857,077.05 (இரண்டு மில்லியன் எண்ணூற்று ஐம்பத்தேழாயிரத்து எழுபத்தேழு மற்றும் ஐந்து சதம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) அத்துடன் 2025.10.02 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையிலான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தின் குத்தகை உரிமையை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ. அன்ட் எச். ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். டீ. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நிறுவன அறவீட்டுப் பிரிவின் தொடர்பு முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

நில அளவை பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 70 ஆம் இலக்க Field Sheet மற்றும் Cad.Map. 280007 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 779 என விபரிக்கப்பட்டுள்ள மற்றும் பிரிக்கப்பட்டு, எல்லை நிர்ணயிக்கப்பட்ட போட் லேண்ட் என அடையாளப்படுத்தப்பட்ட காணி கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலகப் பிரிவின், சாமபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அம்பாறை கிராமத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு வடக்கு: 777 மற்றும் 778 காணித்துண்டுகளையும்; கிழக்கு:778 மற்றும் PP2114 காணித்துண்டுகளையும்; தெற்கு: PP2114 மற்றும் 780 ஆம் இலக்க காணித்துண்டுகளையும்; மேற்கு: 780 மற்றும் 775 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டு நான்கு தசம் ஆறு ஒன்று ஏழு ஹெக்டெயார் (ஹெக். 4.617) பரப்பளவுடன் F03/91 எனும் இலக்கத்தின் கீழ் அம்பாறை காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட 779 காணித்துண்டின் பிரிக்கப்படாத ஹெக்டெயார் 1.4437 பரப்பளவு F03/91 எனும் இலக்கத்தின் கீழ் அம்பாறை காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் லயன் எஸ். நேசராசா தயாரித்த 2016.06.19 ஆந் திகதியிட்ட SNR/2016/3010 ஆம் இலக்க வரைபடத்தில் மேற்குறிப்பிட்ட பிரிக்கப்படாத பரப்பளவு காணித்துண்டு A என விபரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலகப் பிரிவினுள், வெவ்கம் பத்துவில் (வடக்கு), அம்பாறை நகர சபை எல்லைகளுள் அம்பாறையில், அம்பாறை H வலயத்தில் அமைந்துள்ளது இக்காணித்துண்டு வடக்கு: 779 ஆம் இலக்க காணித்துண்டையும்; கிழக்கு: 778 ஆம் இலக்க காணித்துண்டையும்; தெற்கு: PP2114 ஆம் இலக்க காணித்துண்டையும்; மேற்கு: 780 ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டு,

ஒன்று தசம் நான்கு நான்கு மூன்று ஏழு ஹெக்டெயார் (ஹெக். 1.4437) அல்லது மூன்று ஏக்கர் இரண்டு றூட் மற்றும் பத்து தசம் எட்டு பூச்சியம் பேர்ச் (03ஏ. 02றூ. 10.80பே) என்ற பரப்பளவுடன் அங்குள்ள அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

அப்பிரிக்கப்படாத பரப்பளவு உரிமம் பெற்ற நில அளவையாளர் லயன் எஸ். நேசராசா தயாரித்த 2016.10.19 ஆந் திகதியிட்ட SNR/2016/3145 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 3 எனவும் விபரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், அம்பாறை பிரதேச செயலகப் பிரிவினுள், வெவ்கம் பத்துவில் (வடக்கில்), அம்பாறை நகர சபை எல்லைகளுள், அம்பாறை H வலயத்தில் அமைந்துள்ளது இக்காணித்துண்டு வடக்கு: 2 ஆம் இலக்க காணித்துண்டையும்; கிழக்கு: 778 ஆம் இலக்க காணித்துண்டையும்; தெற்கு: PP2114 ஆம் இலக்க

காணித்துண்டையும் (தற்போது ஓடை); மேற்கு: 780 (தற்போது ஓடை) மற்றும் 775 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

இக்காணித்துண்டு ஒன்று தசம் நான்கு நான்கு மூன்று ஏழு ஹெக்டெயார்கள் (ஹெக். 1.4437) அல்லது மூன்று ஏக்கர் இரண்டு றூட் மற்றும் பத்து தசம் எட்டு பூச்சியம் பேர்ச் (03ஏ. 02றூ. 10.80பே) என்ற பரப்பளவுடன் அங்குள்ள அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

ஏ. சீ. எச். அத்துகோறால,
சிரேஷ்ட முகாமையாளர்,
நிறுவன அறவீடு.

இலங்கை வங்கி,
நிறுவன அறவீட்டுப் பிரிவு,
3 ஆம் தளம்,
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

04-319

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.21 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது.

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி ஐ. ஐ. எம். கே. ஜயசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2021.12.27 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 356 இன் பேரில் கம்பளை, ஜயமாலாபுர, நாவலப்பிட்டிய றோட், இல. 367/58, என்னும் முகவரியில் அமைந்த M/S வீரசூரிய பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெற்றிடமிருந்து ஐம்பது மில்லியன் ரூபாய் கடன் மீது 2023.10.02 ஆந் திகதி வரை முதலும் வட்டியும் ரூபா 63,566,233.95 (அறுபத்து மூன்று மில்லியன் ஐந்நூற்று அறுபத்தாறு ஆயிரத்து இருநூற்று முப்பத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றைந்து சதம்) அத்துடன் ரூபா 46,234,485.88 (நாற்பத்தாறு மில்லியன் இருநூற்று முப்பத்து நான்கு ஆயிரத்து நானூற்று எண்பத்தைந்து ரூபாய் எண்பத்தெட்டு சதம்) மீது ஆண்டுக்கு பதினேழு தசம் நான்கு ஆறு (17.46%) வீதத்தில் 2023.10.03 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. பிரசித்த நொத்தாரிசு திருமதி ஐ. ஐ. எம். கே. ஜயசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2021.12.27 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 356 இன் பேரில் ஐம்பது மில்லியன் ரூபாய் கடன் மீது ரூபா 63,566,233.95 (அறுபத்து மூன்று மில்லியன் ஐந்நூற்று அறுபத்தாறு ஆயிரத்து இருநூற்று முப்பத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றைந்து சதமும்) அத்துடன் 2023.10.03 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T & H ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21 இற்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கம்பளை மேற்தரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

1. மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், உடபுலத்கம அம்பகமுவ கோரளையில் அம்பகமுவ பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் ருவன்புர 320 டீ இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் (உறுதியின் பிரகாரம் மிகவும் சரியானது ருவன்புர 320 ஜீ இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவு) குடாஓயவில் அமைந்த "குடாஓயா எஸ்டேற்" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எல். டீ. வை. விஜேவர்தன தயாரித்த 2014, செத்தெம்பர் 26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 15407 இல் காணித்துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: மேற்கூறிய வரைபடம் இல. 15407 இல் காணித்துண்டு 5 மற்றும் பீபீ மஹ 913 இன் காணித்துண்டு 1 உம்: கிழக்கு: பீபீ மஹ 913 இன் காணித்துண்டு 1 மேபீல்ட் எஸ்டேற், மேற்கூறிய வரைபடம் இல. 15407 இல் காணித்துண்டு 1 மற்றும் ஆர்கைல் எஸ்டேற்றும்; தெற்கு: மேற்கூறிய வரைபடம் இல. 15407 இல் காணித்துண்டு 6 என அடையாளமிட்ட ஆர்கைல் எஸ்டேற்றும் ஆர்கைல் எஸ்டேற் மற்றும் பாதை மிகவும் சரியானது ஆர்கைல் எஸ்டேற், காணித்துண்டு 6 ஆர்கைல் எஸ்டேற் மற்றும் பாதையும்; மேற்கு: பாதை மற்றும் மேற்கூறிய வரைபடம் இல. 15407 இல் காணித்துண்டுகள் 4 மற்றும் 5 உம் எல்லைகளாகக் கொண்டு இருபத்தேழு ஏக்கர் பத்து தசம் இரண்டு ஒன்று பேர்ச் (27ஏ. 00றூ. 10.21பே) அல்லது ஹெக்டெயார் 10.9570 விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்கூறிய வரைபடம் இல. 15407 இல் எல்லை நிர்ணயித்த பாதைகள் நெடுகவும் மற்றும் அதன் மீதான உரிமையும் ஆகும். இக்காணி கம்பளை காணிப்பதிவகத்தில் B 119/36 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், உடபுலத்கம அம்பகமுவ கோரளையில் அம்பகமுவ பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் ருவன்புர 320 ஜீ இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடாஓயவில் அமைந்த "குடாஓயா எஸ்டேற்" என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எல். டீ. வை. விஜேவர்தன தயாரித்த 2014, செத்தெம்பர் 26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 15407 இல் காணித்துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: பாதையும்; கிழக்கு: பாதையும் ஆர்கைல் எஸ்டேற்றும்; தெற்கு: ஆர்கைல் எஸ்டேற்றும் பாதையும்; மேற்கு: பாதையும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் இருபத்து மூன்று தசம் ஏழு பூச்சியம் பேர்ச் (00ஏ. 02றூ. 23.70பே) அல்லது ஹெக்டெயார் 0.2624 விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். அத்துடன் மேற்கூறிய வரைபடம் இல. 15407 இல் எல்லை நிர்ணயித்த பாதைகள் நெடுகவும் மற்றும் அதன் மீதான உரிமையும் ஆகும். இக்காணி கம்பளை காணிப்பதிவகத்தில் B 119/37 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

இயந்திர சாதனங்களின் பட்டியல்

மேலே முதலாவது அட்டவணையில் விபரித்த காணியிலும் நிலமனையிலும் பொருந்தியுள்ள பொருத்துகள் மற்றும் இயந்திர சாதனங்கள் பின்வருமாறு.

| No. | Description | Quantity | Price |
|---|---|---|---|
| 1. | 01 SET OF LB 1200 ASPHALT MIXING PLANT INCLUDES MAIN PART, BAG FILTER, 40M3 BITUMEN TANK, RECYCLE FILTER TANK, 10M3, DIESEL TANK, DUST MIXER HS CODE:84743200, INCO - TERMS : CIF | 01 | USD 418,500.00 |

மேலும், இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிலம் மற்றும் வளாகங்களில் இப்போதும் இனியும் இணைக்கப்பட வேண்டிய அனைத்து வகையான மற்றும் விளக்கங்களும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திருமதி டீ. ஜீ. வீ. எல். பண்டார,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கம்பளை

04-322

**டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளின் கடன்களை அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ ஆல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்த அறிவிப்பு.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 8 இன் படி, பின்வரும் தீர்மானம் 2026, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி அன்று டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**சபைத் தீர்மானம்**

அதேசமயம், பொரலெஸ்கமுவயைச் சேர்ந்த விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ சொய்சா அல்லது விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ. சொய்சா அல்லது விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ சொய்சா என்பவர், டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ இன் சார்பாக பிரசித்த நொத்தாரிசு கே. எம். சுரவீர, என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2016.05.16 ஆந் திகதியிட்ட 1207 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீதான வருமதியாக கொடுப்பனவுகள் செலுத்தத் தவறியதால்,

மேலும், மேற்கூறிய 1207 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் மேற்கூறிய விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ சொய்சா அல்லது விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ சொய்சா அல்லது விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ சொய்சா என்பவர், டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீக்கு 2025, மாச்சு மாதம் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய தொகையாக, பதின்மூன்று மில்லியன் முன்னூற்று தொண்ணூற்றோராயிரத்து எண்ணூற்று எட்டு ரூபாய் எழுபத்தைந்து சதம் (ரூபா 13,391,808.75) கொண்ட தொகைக்கு 2025, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி முதல் விற்பனை திகதி வரையிலான வட்டியுடன் சேர்த்து, ஏழு மில்லியன் எண்ணூற்று தொண்ணூற்றொன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்து மூன்று ரூபாய் இருபது சதம் (ரூபா 7,899,873.20) கொண்ட தொகைக்கு ஆண்டுக்கு ஐந்து தசம் ஐந்து சதவீதம் (5.5%) என்ற சராசரி நிறையிடப்பட்ட முதன்மை கடன் வீதத்துக்கு (AWPLR - Spot) இது ஒவ்வொரு மாதத்தின் முதல் வணிக நாளிலும் திருத்தம் செய்யப்படும்.

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் கடன்களை அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் டீஎவ்சீசீ வங்கியின் பணிப்பாளர் சபையினால் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கூறப்பட்ட தொகையான பதின்மூன்று மில்லியன் முன்னூற்று தொண்ணூற்றோராயிரத்து எண்ணூற்று எட்டு ரூபாய் எழுபத்தைந்து சதம் (ரூபா 13,391,808.75) கொண்ட

தொகைக்கு 2025, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி முதல் விற்பனை திகதி வரையிலான வட்டியுடன் சேர்த்து, ஏழு மில்லியன் எண்ணூற்று தொண்ணூற்றொன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்து மூன்று ரூபாய் இருபது சதம் (ரூபா 7,899,873.20) கொண்ட தொகைக்கு ஆண்டுக்கு ஐந்து தசம் ஐந்து சதவீதம் (5.5%) என்ற சராசரி நிறையிடப்பட்ட முதன்மை கடன் வீதத்துக்கு (AWPLR - Spot) இது ஒவ்வொரு மாதத்தின் முதல் வணிக நாளிலும் திருத்தம் செய்யப்படும், அல்லது விற்பனை நேரம் வரை செலுத்தப்படாமல் இருக்கும் அதன் எந்தப் பகுதியையும் மீட்டெடுக்க டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ ஆல் செலவிடப்பட்ட அனைத்துப் தொகைகளும், விளம்பரச் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து அறவிடுவதற்காக மேலே குறிப்பிடப்பட்ட 1207 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம், விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ சொய்சா அல்லது விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ சொய்சா அல்லது விக்கிரமசிங்க மெரில் அசோகா டீ சொய்சா என்பவர், டீஎவ்சீசீ வங்கி பீஎல்சீ இல் அடமானம் வைக்கப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு நிலப் பகுதி என்பன உரிமம் பெற்ற ஏலதாரர் துசித் கருணாரத்ன என்பவரினால் பொது ஏலத்தில் விற்கப்படும், இதன் மூலம் பின்வருவனவற்றை முன்மொழிகிறது.

**1207 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விபரம்**

**முதல் பகுதி**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் உள்ள (553ஏ ரத்தனபிட்டிய கிராம சேவையாளர் பிரிவுக்குள் மற்றும் கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவின் கீழ்) சல்பிடி கோரளேயின் பல்லே பத்துவில் பொரலெஸ்கமுவ நகர சபையின் எல்லைகளுக்குள் பொரலஸ்கமுவ வடக்கு, ரத்தனபிட்டிய வீதியில் அமைந்துள்ள தொடர்மாடிக் குடியிருப்பு வளாகத்தில் உள்ள தொடர்மாடிக் குடியிருப்பு கட்டிடத்திற்கு உள்ளேயும் வெளியேயும், வரிமதிப்பீட்டு இல. 46ஏ, பழைய கெஸ்பேவ வீதி (தற்போது ரத்தனபிட்டிய வீதி என அழைக்கப்படுகிறது) வழியாகச் செல்லவும் வரவும் 2016, மாச்சு மாதம் 18 ஆந் திகதி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். நடராஜ் என்பவரினால் சான்றளிக்கப்பட்ட மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். நடராஜ் என்பவரினால் சான்றளிக்கப்பட்ட மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. செல்வரத்தினம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008, ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட 11079 ஆம் இலக்க தொடர்மாடிக் குடியிருப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "GFA" (தரைத்தளம்) எனக் குறிப்பிடப்பட்ட அந்த முழு தொடர்மாடிக் குடியிருப்பு நிலப்பகுதியும் மற்றும் GFA எனக் குறிப்பிடப்பட்ட அந்த முழு குடியிருப்பின் எல்லைகளாவன,

வடக்கு: இந்த தொடர்மாடிக் குடியிருப்பின் பிரிவு CE1, CE19, CE17, CE18 மற்றும் CE3 க்கும் இடையே உள்ள சுவரின் மையப்பகுதி வழியாக;

கிழக்கு: இந்த தொடர்மாடிக் குடியிருப்பின் பிரிவு CE1, CE19, CE5, CE17, CE18 மற்றும் CE3 மற்றும் குடியிருப்பின் பிரிவுக்கு GFA1 இன் மூலம்;

தெற்கு: இந்த தொடர்மாடிக் குடியிருப்பின் பிரிவு CE2 மற்றும் CE3 இன் மூலம்;

